

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 27.12.2025


# நாடாளுமன்றத்தில் தமிழ் முழக்கம்!

“தெருவெல்லாம் தமிழ் முழக்கம்” என்று சொல்வதைப் போல நாடாளுமன்றத்தில் இம்முறை தமிழ் முழக்கம் அதிகமாக ஒலித்துள்ளது.

**நடந்து முடிந்த குளிர்காலக் கூட்டத் தொடரில், நாடாளுமன்ற வரலாற்றிலேயே முதன்முறையாக, மக்களவை உறுப்பினர்களின் 160 உரைகள் அவர்களின் தாய்மொழியிலேயே ஒலித்துள்ளது. இதில் 50 உரைகள் தமிழில் நிகழ்த்தப்பட்டு உள்ளன என்ற தகவல், தமிழர்கள் அனைவருக்கும் பெருமை தரும் தகவல், ஆகும். இவற்றின் வாயிலாக, மற்ற மாநில மொழிகளை முந்தி, நம் தமிழ் மொழி முதலிடம் பிடித்துள்ளது.**

நாடாளுமன்றத்தில் இந்தி, ஆங்கிலம் என இரு மொழிகள் மட்டுமே பேச முடியும். இந்த மொழிகள் தெரியாதவர்கள், தாய்மொழிகளில் பேச முடியாத நிலை இருந்தது. இந்த நிலையில், “மொழிபெயர்ப்பாளர்களை நியமிக்க வேண்டும், மாநில மொழிகளில் பேசுவதற்கு அனுமதி தர வேண்டும்” என்ற கோரிக்கை எழுந்தது. இக்கோரிக்கை ஏற்கப்பட்டு மொழி பெயர்ப்பாளர்கள் சமீப காலமாக நியமிக்கப்பட்டு வருகிறார்கள்.

2023 ஆம் ஆண்டு குளிர்காலக் கூட்டத்தொடரில், மக்களவை நடவடிக்கைகளில், ஒவ்வொரு நாளும் கேள்வி நேரத்தின் போது மட்டும், மொழிபெயர்ப்பு முயற்சி துவங்கப்பட்டது. பின்னர் அனைத்து நடவடிக்கைகளையும் மொழிபெயர்க்கத் திட்டமிடப்பட்டது. அரசியலமைப்புச் சட்டத்தில், அலுவல் மொழிகளாக அதிகாரப்பூர்வமாக, 22 மொழிகள் இடம்பெற்றுள்ளன. இந்த 22 மொழிகளிலும், மக்களவை நடவடிக்கைகள் மொழி பெயர்க்கப்படும் சூழல் உருவானது. இதற்காக மொத்தம் 84 மொழி பெயர்ப்பாளர்கள் பணி அமர்த்தப்பட்டனர். இதனால் இந்தி, ஆங்கிலத்துக்கு மட்டுமே இருந்த மொழிபெயர்ப்பு வசதி, அனைத்து மொழிகளுக்கும் கிடைத்தது.

மக்களவை அலுவல் பட்டியலும் தமிழ் உள்ளிட்ட மாநில மொழிகளில் கடந்த ஆண்டு முதல் வெளியாகி வருகிறது. மொத்தம் பத்து மொழிகளில் இது கிடைக்கிறது.

இதனால் ஆங்கிலம், இந்தி தவிர மற்ற மாநில மொழிகள் ஒலிக்க வாய்ப்பு ஏற்பட்டது. பல்வேறு மொழிகளில் மொத்தம் 160 உரைகள் இந்தக் கூட்டத்தொடரில் மக்களவை உறுப்பினர்களால் நிகழ்த்தப்பட்டுள்ளன. இவற்றில், 50 உரைகள் தமிழில் நிகழ்த்தப்பட்டன. 43 உரைகள் மராத்தியில் பேசப்பட்டுள்ளன. வங்க மொழியில் 25 உரைகள் இடம்பெற்றுள்ளன.

2019, 2024 ஆகிய இரண்டு நாடாளுமன்றத் தேர்தலிலும் தமிழ்நாட்டில் இருந்து முழுமையாக திராவிட முன்னேற்றக் கழகம், மற்றும் கூட்டணிக் கட்சி எம்.பி.க்கள் வெற்றி பெற்றுச் சென்றுள்ளார்கள். 2019 தேர்தலில் ஒரு தொகுதியில் அ.தி.மு.க. வென்றது. இம்முறை அதுவும் இல்லை. மொத்தமாக தி.மு.க. கூட்டணியே கைப்பற்றியது. எனவேதான் தமிழ் முழக்கம் அதிகம் ஒலித்தது.

**தமிழ்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவி ஏற்கும் போதே, “தமிழ் வாழ்க, தமிழ்நாடு வாழ்க, பெரியார் வாழ்க, அண்ணா வாழ்க, கலைஞர் வாழ்க, மார்க்ஸ் வாழ்க, அம்பேத்கர் வாழ்க” என்று முழங்கிய காட்சிகளையும் நாம் பார்த்தோம். இதனை வட மாநில உறுப்பினர்கள் அதிர்ச்சியோடு நோக்கியதையும் பார்த்தோம். ‘தமிழ் வாழ்க’ என்று முழங்கிய நமது உறுப்பினர்கள், இப்போது தமிழிலேயே அதிகம் பேசி தங்கள் கருத்துகளையும் பதிவு செய்துள்ளார்கள். இது தமிழ்நாட்டுக்கும், தமிழ்நாடு முதலமைச்சருக்கும் கிடைத்த மாபெரும் வெற்றியாகும்.**

**‘நாங்கள்தான் மொழிபெயர்ப்பை ஏற்பாடு செய்து தந்தோம்’ என்று பா.ஜ.க. தரப்பு சொல்லலாம். மொழிபெயர்ப்பை ஏற்பாடு செய்துதரக் கூடிய நெருக்கடி எதனால் வந்தது? மாநில மொழிகளுக்கு முக்கியத்துவம் தர வைத்தவர்கள் யார்? இந்த மாநிலங்களில் இருந்து சென்ற உறுப்பினர்களால்தான் இதற்கு மக்களவைத் தலைவர் ஒப்புக் கொண்டார் என்பதே முழு உண்மை ஆகும்.**

“நாடாளுமன்ற நடவடிக்கைகள் இந்தி அல்லது ஆங்கிலத்தில் மட்டுமே இருக்க வேண்டும்” என்று அரசமைப்புச் சட்டத்தின் 120 ஆவது பிரிவு சொல்கிறது. ‘இந்தி அல்லது ஆங்கிலத்தில் போதுமான அளவுக்கு நன்கு பேச முடியாதவர்கள், அவர்களின் தாய்மொழியில் அவைத் தலைவரின் அனுமதியைப் பெற்று பேசலாம்’ என்றும் அந்தப் பிரிவு சொல்கிறது. ‘இந்தி, ஆங்கிலத்தில் பேச முடியாதவர்கள்’ என்ற வரையறையே தவறானது. இது வேறு வழியில்லாமல் தரப்பட்ட வாய்ப்பு ஆகும். அப்படி இருக்கக் கூடாது. தமிழ் உள்ளிட்ட மொழிகளில் பேசுவதற்கான மொழி உரிமையை வழங்க வேண்டும் என்பதை தி.மு.க. தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளது.

**இந்திய அரசமைப்புச் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் 22 மொழிகள் அலுவல் மொழிகளாக அறிவிக்கப்பட்டு உள்ளன. 38 மொழிகளைச் சேர்ந்தவர்கள் தங்கள் மொழியையும் இந்தப் பட்டியலில் இணைக்க வேண்டும் என்று குரல் கொடுத்து வருகிறார்கள். இந்த நிலையில் இந்தியையும், ஆங்கிலத்தையும் மட்டுமே வைத்துக் கொள்வது மிக மோசமான மொழித் தடுப்பு ஆகும்.**

மேலும், 2014 பா.ஜ.க. ஆட்சிக்குப் பிறகு ஆங்கிலப் புறக்கணிப்பு திட்டமிட்டு நடந்தது. அனைவருக்கும் புரியும் வகையில் ஆங்கிலம் பேசுவதை, ஆங்கிலத்தில் பதில் அளிப்பதைத் தவிர்த்து இந்தியிலேயே பதில் சொல்வதை, இந்தியில் அதிகம் பேசுவதைச் செய்து வருகிறார்கள். ஆங்கிலத்தில் கேள்வி கேட்டாலும், இந்தியில் பதில் சொல்வதை வழக்கமாக வைத்துள்ளார்கள். இந்தி பேசாத மாநில மக்கள் மீது இந்தித் தாக்குதலை தொடர்ந்து பா.ஜ.க. செய்து வருவதைத்தான் இந்தப் பத்து ஆண்டுகளாகப் பார்க்கிறோம். ‘நாங்கள் எங்கள் மொழியில் பேசுகிறோம், நீங்கள் உங்கள் மொழியில் பேசிக் கொள்ளுங்கள்’ என்று அவர்கள் இறங்கி வந்துள்ளார்கள்.

தமிழ்க்குரலை, தமிழ்நாட்டுக் குரலை நாடாளுமன்றம் கேட்பதற்குக் காரணம், இக்குரலுக்கான அரசியல் சக்திகள் தமிழ்நாட்டில் இருந்து முழுமையாக வென்று சென்றதுதான் காரணம். தி.மு.க. கூட்டணியானது “நாற்பதுக்கு நாற்பது” வென்றது தான் இதற்குக் காரணம். இத்தகைய முழுமையான, தொடர்ச்சியான வெற்றிகள் மூலமாகத்தான் தமிழர்தம் அரசியல் ஒழுங்காக ஒலிக்க முடியும்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைத்தல் போன்ற நடவடிக்கைகளின் மூலமாக இதனைத் தடுக்க, குறைக்கப் பார்ப்பார்கள். அதனையும் எச்சரிக்கையுடன் தடுத்தாக வேண்டும்.

**தமிழ் வாழ்க!**

**தமிழ் எங்கும் ஒலிக்கட்டும்!**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.12.2025) கள்ளக்குறிச்சியில் நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன், நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன், சட்டமன்ற உறுப்பினர்கள் வசந்தம் க.கார்த்திகேயன், தா.உதயசூரியன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் திருமதி அங்கயற்கண்ணி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.12.2025) கள்ளக்குறிச்சி மாவட்டம், வீரசோழபுரத்தில் 39.81 ஏக்கர் பரப்பளவில், 139 கோடியே 41 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கள்ளக்குறிச்சி மாவட்ட புதிய ஆட்சியர் அலுவலகக் கட்டடத்தை திறந்து வைத்தார். உடன், அமைச்சர்கள் எ.வ.வேலு, முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சி.வி. கணேசன், நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன், சட்டமன்ற உறுப்பினர்கள் தா. உதயசூரியன், வசந்தம் க.கார்த்திகேயன், ஏ.ஜெ.மணிக்கண்ணன், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, மாவட்ட ஆட்சித் தலைவர் எம்.எஸ். பிரசாந்த், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.12.2025) கள்ளக்குறிச்சி மாவட்டம், வீரசோழபுரத்தில், 139 கோடியே 41 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கள்ளக்குறிச்சி மாவட்ட புதிய ஆட்சியர் அலுவலகக் கட்டடத்தை திறந்து வைத்து, மாவட்ட ஆட்சித் தலைவர் எம்.எஸ். பிரசாந்த், அவர்களை மாவட்ட ஆட்சியர் இருக்கையில் அமர வைத்தார். உடன், அமைச்சர்கள் எ.வ. வேலு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சி.வி. கணேசன் ஆகியோர் உள்ளனர்.

### திருவண்ணாமலை மாவட்டத்திற்கு வருகை தரும்

## கழகத் தலைவர் செல்லுமிடமெல்லாம் எழுச்சியான வரவேற்பு!

### பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அறிக்கை!

*திருவண்ணாமலை, டிச. 27-*

திருவண்ணாமலை மாவட்டத்தில் அரசு நிகழ்ச்சிகள், முத்தமிழறிஞர் கலைஞர் சிலை திறப்பு விழா நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வருகை தரும் முதலமைச்சரும், கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் செல்லுமிடமெல்லாம் எழுச்சியான வரவேற்பு அளிக்கப்படும் என்று பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து பொதுப் பணித்துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினருமான எ.வ.வேலு அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் ...



தமிழ்நாட்டை உலக அரங்கில் உயர்த்திக் காட்டிய வரலாற்று நாயகர், எளியோர் வாழ்வில் ஏற்றம் கண்டிட எண்ணற்ற திட்டங்களை தந்திட்ட திராவிட மாடல் நாயகர், மண், மொழி, மானம் காத்திட தமிழ்நாட்டு மக்களை ஓரணியில் திரட்டிய ஒப்பற்ற தலைவர், திராவிட இயக்கத்தின் உயிர் கொள்கையாம், சமூக நீதியை உயர்த்திப் பிடித்து காத்து நிற்கும் சமூக நீதி காவலர், எத்தனை இடர்கள் சூழ்ந்த போதும் மாநில உரிமைகளை காத்து நிற்கும் மகத்தான போராளி, உலகத் தமிழர்கள் உள்ளங்கள் எல்லாம் நிறைந்திருக்கும் அற்புத தலைவர், தமிழ்நாட்டின் முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திருவண்ணாமலை மாவட்டத்தில் அரசு நிகழ்ச்சிகள், நவீன தமிழகத்தை உருவாக்கிட்ட சிற்பி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிலை திறப்பு விழாக்கள் ஆகிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வருகை தந்துள்ளார்கள்.

முதல்வர் பங்கேற்கும் நிகழ்ச்சிகளில் நமது திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்டத்தை சேர்ந்த மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், பகுதி கழக பொறுப்பாளர்கள், அணி சார்ந்த அமைப்பின் நிர்வாகிகள், கிளை கழக, வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கழக தலைவர் செல்லுமிடமெல்லாம் எழுச்சியான வரவேற்பு அளித்திட வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு அறிக்கையில் கூறியுள்ளார்.

### நாமக்கல் கிழக்கு மாவட்ட சட்டமன்றத் தொகுதி வாரியாக

## “வெல்லும் தமிழ்ப் பெண்கள்” தி.மு.க. மேற்கு மண்டல மகளிர் அணி மாநாடு குறித்த ஆலோசனைக் கூட்டம்!

### கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி. அறிக்கை!

*நாமக்கல், டிச. 27 -*

நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினரும் நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என் இராஜேஷ்குமார் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில், திருப்பூர் மாவட்டம் பல்லடத்தில் வரும் 29ஆம் தேதி மாலை 4 மணிக்கு நடைபெற உள்ள வெல்லும் தமிழ் பெண்கள் மாநாட்டில் நாமக்கல் கிழக்கு மாவட்டத்தின் சார்பாக மகளிர் அணியினர் கலந்து கொள்வது குறித்து சட்டமன்ற தொகுதி வாரியாக ஆலோசனை கூட்டம் இன்று (27 ஆம் தேதி சனிக்கிழமை) நடைபெற உள்ளது.

இராசிபுரம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் அருகில் காலை 9 மணிக்கும், சேந்தமங்கலம் ஒன்றிய கழக செயலாளர் அ.அசோக்குமார் இல்லத்தில் காலை 10:30 மணிக்கும், நாமக்கல் மாவட்ட கழக அலுவலகத்தில் நண்பகல் 12:30 மணிக்கும் ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளது.



இந்த ஆலோசனைக் கூட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன், சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம், தமிழ்நாடு பழங்குடியினர் நலவாரிய தலைவர் கனிமொழி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் தொகுதிக்கு உட்பட்ட மாவட்ட நிர்வாகிகள், தொகுதி பார்வையாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், தொகுதி பொறுப்பாளர்கள், மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப் பாளர்கள் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், தொகுதி துணைப் பொறுப்பாளர்கள், ஊராட்சி பொறுப்பாளர்கள், தொகுதி பொறுப்பாளர்களால் நியமிக்கப்பட்ட பேருந்து பொறுப்பாளர்கள் என அந்தந்த தொகுதிக்கு உட்பட்டவர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அவர் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.